இந்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமையை சென்னை ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் சங்கத்திற்கு அல்லது அதுபோன்ற சங்கத்திற்கு அளிக்கும் வகையில் சென்னை மாநகராட்சிச் சட்டப் பிரிவு 285-ஏ-ஐத் திருத்தலாமா அல்லது அதற்கு வழி செய்யும் விதிகளை வகுக்கலாமா அல்லது வேண்டாமா என்பது பரிசீலனையில் உள்ளது.

Accident due to fall of sign board near Anna Salai.

* 236 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether any sign board of shops projecting outside a commercial establishment collapsed in Mount Road, near Anna Statue resulting in casualties about the 28th April 1973; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) அண்ணா சாலையில் "பிளாக்கர்ஸ் சாலை" வந்து சேரும் இடத்தில் நிர் 9 ('பி') எண் கொண்ட கட்டிடத்தில் அமைந்துள்ள துணிக் கடையின் விளம்பரப் பலகை 28—4—1973 நண்பகல் 1.30 மணிக்கு கீழே விழுந்தது. அச்சமயம் அவ் வழியாகச் சென்று கொண்டிருந்த ஏழு பாதசாரிகளுக்குக் காயம் ஏற்பட்டது. அவர்கள் வந்து தங்கும் நோயாளிகளாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். கட்டிட சேதம் ஏதும் இல்லை. மேற்படி பலகை சரியாகப் பொருத்தப்படாததால் கீழே விழுந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 237, 238, 239, 240, 241, 242 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகின்றன.

Concessional tickets for students in State Transport buses.

* 243 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to issue tickets at concessional rates for students in the State Transport Undertakings for their journeys to their native places during vacations; and

(b) if so, the details thereof?

1973 நவம்பர் 20]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: டிரையினில் வழங்கப்படும் கன்செஷன் போன்ற கன்செஷன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை அளிப்பது பள்ளிகளுக்குப் போவதற்கே தவிர, வீட்டிற்குப் போவதற்கு அல்ல.

விரைவுப் பேருந்துகளில் பழுது பார்க்கும் கருவிகள்

***244 வினா—திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு போக்குவாத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு விரைவுப் பேருந்துகள் எதிர்பாராத விதத்தில் பஞ்சர் போன்ற சிறு ரிப்பேர் ஏற்படும் காலத்தில் உடன் சீர்செய்யத் தேவைப்படும் தளவாடங்கள் (tools bit) கொடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, பல நேரங்களில் சிறு ரிப்பேர் இருந்தால் கூட, டயர் அல்லது ட்யூப் பஞ்சர் ஆனால் கூட அதை மாற்றுவதற்கு அல்லது சரி செய்வதற்குத் தேவையான உபகரணங்கள், டூல்ஸ் வண்டிகளில் இருப்பதில்லை. அந்த நிலைமையை மாற்றுவது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: எதிர்பாராமல் ஏற்படுகின்ற பிரேக் டவுன்களை சரிபார்ப்பதற்குத் தேவையான கருவிகள் பொதுவாக விரைவுப் பேருந்துகளில் கட்டாயம் வைக்கப்பட வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. எங்கேனும் அப்படியில்லை என்றால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாக நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஒரு பஸ் வாங்கும்போது ஒரு டூல் கிட் வண்டியை விற்பவர்கள் கொடுக்கிறார்கள். அந்த